IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.64/2026

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | BOOPALAN |
| FATHER'S NAME | : | SAMPATH |
| VILLAGE | : | KARIGIRI |
| OCCUPATION | : | MESTHIRI |
| AGE | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 29th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறேன். 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையொப்பத்தை 19.02.2026 ம் வருடம் சண்டை நடந்தது 20.02.2026 ல் அது சம்மந்தமாக மனோகரன் என்பவரின் வீட்டின் அருகே போலிசார் வரைபடம் வரைந்தார்கள். என்னை அழைத்து சாட்சியமாக கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் ஐயப்பன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எழுதாத வெள்ளைத் தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. யார் வீட்டில் சம்பவம் நடந்தது என்றால் ஆஜரில் உள்ள எதிரியின் வீட்டில். நான் இரண்டு கையொப்பம் செய்து கொடுத்தேன். இரண்டு கையொப்பமும் எழுதிய தாளில் தான் செய்து கொடுத்தேன்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.64/2026

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | AYYAPPAN |
| FATHER'S NAME | : | SUBRAMANI |
| VILLAGE | : | KARIGIRI |
| OCCUPATION | : | TAILOR |
| AGE | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 29th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறேன். டெய்லராக வேலை செய்து வருகிறேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையொப்பத்தை எங்கள் ஊரில் உள்ள சிவகாமி, மனோகரன் என்பவரின் வீட்டின் அருகே செய்து கொடுத்தேன். கையொப்பத்தை 20.02.2026 வருடம் மாலை 03.30 மணியளவில் போலிசார் வரைபடம் வரைந்தார்கள். என்னை அழைத்து சாட்சியமாக கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் பூபாலன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வரைபடம் வரையும் போது பார்த்தேன். சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய வீட்டில் சம்பவம் நடந்தது என்றால் எதிரியுடைய வீட்டில். எழுதாத வெள்ளைத் தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் படித்துப் பார்க்கவில்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 29.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.